# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 16.05.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல் ஹஷ்ரின் 24 வது வசனத்தை ஓதினார்கள்:**

**பொருள் : அவனே அல்லாஹ். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு இல்லை. அவன் அரசன்; தூயவன்; சாந்தியின் பிறப்பிடம்; பாதுகாப்பு அளிப்பவன்; கண்காணிப்பவன்; வல்லவன்; உடைந்த உள்ளங்களை இணைப்பவன்; மிக மேலானவன். அவர்கள் (அவனுக்கு) இணை வைக்கின்றவற்றிலிருந்து அல்லாஹ் தூயவன்.**

அல்லாஹ்வின் ஒரு பண்பு **ஜப்பார்** ஆகும். நான் ஓதிய வசனத்தில் இந்த பண்பைப் பற்றி வருகிறது. இறைவன் தொடர்பாக **ஜப்பார்** என்ற சொல் வரும்போது அந்த சொல் அடியானுக்காக பயன்படுத்தப்படும்போது அதற்கு என்ன பொருள் கொடுக்கப்படுகின்றதோ அதற்கு மாற்றமான பொருள் இறைவனுக்காக பயன்படுத்தப்படும் போது கொடுக்கப்படும். அகராதி வல்லுநர்கள் இந்த சொல்லுக்கு என்ன பொருள் கொடுத்துள்ளார்களோ அதை நான் முதலில் கூறுகின்றேன்.

இமாம் ராகிப் அவர்களின் முஃப்ரதாத்தில் **ஜப்பாருல் முதகப்பிர்** என்று கூறப்பட்டிருப்பதி லிருந்து அல்லாஹ்வின் பெயர்களில் **அல் ஜப்பார்** என்பதும் ஒன்று என்று தெரிகிறது. அரபிகளின் கூற்றில் **ஜபர்துல் ஃபகீர்** – நான் ஏழைகளுக்கு வழங்கினேன். அல்லாஹ் மக்களுக்கு தனது எண்ணற்ற அருள்களை வழங்குவதால் இந்த பெயர் அவனுக்கு இருக்கின்றது. **அல் ஜப்பார்** என்பது மனிதனுக்குரிய பண்பாக கூறப்படும்போது எந்த நபர் தனது தகுதிக்கு பொருந்தாத வாதங்களை செய்கின்றாரோ அந்த நபருக்கு பயன்படுத்தப்படுகிறது. மனிதன் தொடர்பாக **ஜப்பார்** என்ற சொல் அவனை இழிவுபடுத்தும் வகையில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. பிறகு **லிஸானுல் அரப்** என்ற அகராதி நூலில் **அல் ஜப்பார்** என்பது அல்லாஹ்வின் ஒரு பண்பாகும். அதாவது தனது படைப்பினங்களை தனது நாட்டத்திற்கு ஏற்ப அவன் ஏவுகின்ற கட்டளைகளின்படியும் தடுக்கின்ற கட்டளைகளின் படியும் வழிநடத்துபவன் என்ற பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித பலவந்தமும் இல்லை என்பது தெளிவாக புரிந்து கொள்ளப்பட வேண்டும். அல்லாஹ் நல்லது எது? தீயது எது? என்பதை மனிதன் முன் வைத்து விட்டான். நன்மைகளை செய்தால் நற்கூலியைப் பெறுவீர்கள். தீமைகளைச் செய்தால் அதற்கான தண்டனை இயற்கைச் சட்டத்திற்கேற்ப அதை செய்தவருக்கு கிடைக்கும். ஆனால் அல்லாஹ்வின் கருணையின் பண்பு இருக்கின்றது. எனது கருணை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது என்றும் அல்லாஹ் கூறியுள்ளான். அதற்கேற்ப தான் விரும்புபவரை அவன் மன்னித்து விடுகின்றான். ஏனென்றால், அவன் எஜமானனாக இருக்கின்றான். அகராதியில் **அல் ஜப்பார்** என்பதற்கு பொருள் அந்த அல்லாஹ்வின் பண்பை எவரும் பெற முடியாது என்று எழுதப்பட்டுள்ளது. மனிதன் அந்தப் பண்பு வரை சென்றடைய முடியாது என்று எழுதப்பட்டுள்ளது. **அல் ஜப்பார்** என்ற சொல் படைப்பினங்களை விட உயர்வான தகுதியில் உள்ள பரம்பொருளுக்கு கூறப்பட்டுள்ளது என்றும் அகராதிப் பொருளில் எழுதப்பட்டிருக்கிறது. மனிதனுக்காக இந்த சொல் பயன்படுத்தப்படும்போது தனது பொறுப்பில் எந்தவொரு நபருக்குரிய உரிமையையும் ஏற்றுக்கொள்ளாத கர்வமுள்ள மனிதனையும் **ஜப்பார்** என்று நாம் கூறுகின்றோம். லிஆனி அவர்கள் அல்லாஹ்வை வணங்குவதிலிருந்தும் கர்வத்துடன் மறுப்பு தெரிவிப்பவருக்கும் **ஜப்பார்** என்ற சொல் கூறப்படுவதாக கூறியுள்ளார்கள். கருணை இல்லாத உள்ளத்திற்கு **கல்புன் ஜப்பார்** என்று கூறப்படுகிறது. கர்வத்தின் காரணமாக போதனையை ஏற்றுக் கொள்ளாத உள்ளத்திற்கும் இவ்வாறு கூறப்படும்.

**ரஜுலுன் ஜப்பார்** – அதாவது தனது கூற்றை பிறரை பலவந்தமாக ஏற்க வைப்பவருக்கும் ஜப்பார் என்ற சொல் கூறப்படும். இது தொடர்பாக அல்லாஹ் **வ மா அன்த அலைஹிம் பி ஜப்பார்** – நீர் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவரல்ல என்று அல்லாஹ் கூறியுள்ளான். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படி நீர் பலவந்தமாக அவர்களை வற்புறுத்த முடியாது என்று அல்லாஹ் இங்கு கூறுகின்றான். உரிமையில்லாமல் சண்டை போடுகின்ற ஒவ்வொருவருக்கும் **ஜப்பார்** என்று கூறப்படுகிறது. **அல் ஜப்பார்** என்ற சொல் மகத்தானவன், ஆற்றல் மிக்கவன் என்ற பொருளிலும் கூறப்படுகிறது. எவர் உயர்ந்து கொண்டே செல்வாரோ மேலும் அதனால் அவரது கண்ணியத்திலும் சிறப்பிலும் எவ்வித குறைவும் ஏற்படாமல் இருக்கின்றதோ அவரையும் ஜப்பார் என்று அழைக்கின்றோம் என ஹஸ்ரத் இமாம் அபூ ஹனீஃபா அவர்கள் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பல்வேறு அகராதிகளிலிருந்தும் இதற்கான பொருளை ஒன்றுதிரட்டி இவ்வாறு எழுதியுள்ளார்கள்.**

**ஜப்பார்** அல்லாஹ்வின் பண்புகளில் ஒரு பண்பாக இருக்கின்றது. இதன் பொருள் மக்களின் தேவைகளை நிறைவேற்றுபவன் என்பதாகும். ஆனால் அல்லாஹ் அல்லாதவற்றிற்கு **ஜப்பார்** என்ற சொல் பயன்படுத்தப்படும்போது அதன் பொருள் கிளர்ச்சி செய்பவர், சட்டத்தை மீறி செயல்படுபவர் என்பதாகும். பிறகு **ஜப்பார்** என்பதன் பொருள் மற்றவர்களை தாழ்த்தி தன்னை உயர்த்துபவன் என்பதாகும். பிரிதோரிடத்தில் **ஜப்பார்** என்பது அல்லாஹ்வின் பண்பாகும். அதாவது சீர்திருத்தத்தை ஏற்படுத்துபவன் என்றும் அவர்கள் எழுதியுள்ளார்கள். அவ்வாறே கிளர்ச்சி செய்கின்ற ஒவ்வொருவருக்கும் கட்டுப்படாதவர்களுக்கும் **ஜப்பார்** என்ற சொல் கூறப்படும் என்றும் எழுதியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.**

**ஜப்பார்** என்ற சொல் சீர்திருத்தத்தை ஏற்படுத்துபவன் என்றிருந்தாலும், ஒருவரது விருப்பத்திற்கு மாற்றமாக அவர் மீது அநீதியிழைத்து பலவந்தமாக அவரை பணியாற்ற வைப்பதற்கும் இந்த சொல் பயன்படுத்தப்படுகிறது. இவ்வகையில் இதன் ஒரு பொருளில் நன்மையும், சீர்திருத்தமும் இருக்கின்றது. இதன் இன்னொரு பொருளில் கடுமையும், அநீதியும் இருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் **அல் ஜப்பார்** என்ற சொல்லுக்கு சீர்குலைந்து போனவற்றை சரியாக்குபவன் என்ற பொருளைத்தான் தந்துள்ளார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தக்தீரே இலாஹி என்ற தலைப்பில் தனது ஆண்டு மாநாட்டு சொற்பொழிவொன்றில் அல்லாஹ்வுடன் பலவந்தத்தை தொடர்புபடுத்தி சிலர் கூறும் தவறான கருத்துகளுக்கு பதில் கூறும்போது அல்லாஹ்வின் பண்பாகிய **அல் ஜப்பார்** என்பதை விளக்கியவாறு இவ்வாறு கூறியுள்ளார்கள்.

திருக்குர்ஆனிலிருந்தும் இறைவன் ஜப்பாராக இருக்கின்றான் என்று தெரிகிறது. ஆனால், ஆட்சேபணை செய்பவர்கள் இந்த சொல்லுக்கு பலவந்தமாக பணிகளைச் செய்ய வைப்பவன் என்பதே பொருள் என்று கூறுகின்றார்கள். ஆனால் எவ்வகையிலும் இது சரியானதல்ல. அரபியில் **ஜபர்** என்ற சொல் உடைந்து போன எலும்பை சரிசெய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இந்த சொல் இறைவனுடன் தொடர்புபடுத்தி கூறப்படும்போது அதற்கு அடியார்களின் சீர்குலைந்து போன பணிகளைச் சரிசெய்பவன் என்பது பொருளாகும். அதன் இன்னொரு பொருள் மற்றவர்களின் உரிமைகளை அமுக்கி விட்டு தனது கண்ணியத்தை நிலைநாட்டுபவன் என்பதாகும்.

அடியார்கள் தொடர்பாக வரும்போதுதான் இந்த இரண்டாவது பொருள் பயன்படுத்தப்படும். இந்த பொருள் இறைவனுடன் தொடர்புபடுத்தி பயன்படுத்தப்படமாட்டாது. அவ்வாறு செய்யவும் முடியாது. ஏனென்றால் எல்லாமே அல்லாஹ்விற்கு உரியதாக இருக்கின்றது. எனவே, மற்றவர்களின் உரிமையைப் பறித்து அல்லாஹ் தனது

கண்ணியத்தை நிலைநாட்டுகின்றான் என்று சொல்லவே முடியாது. நான் ஓதிய (59:24) வசனத்தில் கூறப்பட்டுள்ள இறை பண்புகளை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

**அல் மலிக்கில் குத்தூஸ்** அல்லாஹ் அரசனாவான். அவனிடம் எந்த குறையும் இல்லை. மனிதனின் அரசாட்சி குறைகளில்லாமல் இருக்காது. உதாரணமாக, ஒரு அரசனுக்கு கீழ் இருக்கின்ற குடிமக்கள் தங்கள் நாட்டை காலி செய்து விட்டு இன்னொரு நாட்டின் பக்கம் ஓடிவிட்டால் பிறகு அந்த அரசாட்சி நிலைநிற்காது. அல்லது எல்லா குடிமக்களும் பஞ்சத்தால் பாதிப்பிற்கு ஆளாகி விட்டால் பிறகு அரசனுக்கு எந்த மதிப்பும் இருக்காது. குடிமக்கள் அரசனிடம் உன்னிடம் எங்களை விட அதிகப்படியாக என்ன இருக்கின்றது என்று வாக்குவாதம் செய்ய ஆரம்பித்து விட்டால் அவன் தனது எந்த தகுதியை நிரூபித்துக்காட்ட முடியும்? ஆனால், இறைவனின் அரசாட்சி இவ்வாறானதல்ல. அவன் ஒரு நொடியில் முழு நாட்டையும் அழித்து விட்டு வேறு படைப்பினங்களை உருவாக்க முடியும். அவன் அப்படிப்பட்ட படைப்பாளனாகவும் வல்லமையுள்ளவனாகவும் இல்லையென்றால் அநீதி இல்லாமல் அவனது அரசாட்சி நடைபெற முடியாது. ஏனென்றால், ஒருமுறை உலகிலுள்ள எல்லாருக்கும் இரட்சிப்பை வழங்கிய பிறகு அவன் இன்னொரு உலகத்தை எங்கிருந்து கொண்டு வருவான்? இரட்சிப்பை பெற்றுக் கொண்ட மக்களை உலகில் அனுப்புவதற்காக அவர்களை மீண்டும் அவன் பிடிப்பானா? அவர்கள் மீது அநீதியிழைத்தவாறு தான் வழங்கிய இரட்சிப்பை திரும்ப பெற்றுக் கொள்வானா? இந்நிலையில் அவனது இறைத்தன்மையில் மாசு ஏற்பட்டு விடும். இதனால் உலகிலுள்ள அரசர்கள் போன்று அவனும் குறைகள் நிறைந்த அரசனாகி விடுவான். அப்படிப்பட்ட அரசர்கள் உலகச் சட்டங்களை ஏற்படுத்துகின்றனர். சிறு சிறு வி-யங்களில் கூட அவர்களிடம் சீர்குலைவு ஏற்படுகின்றது. தங்களது சுயநலத்திற்காக அநீதி இழைப்பதை தவிர வேறு வழியில்லை என்பதைப் பார்க்கும் போது அவர்கள் அநீதியிழைப்பதை ஆகுமானதாக ஆக்கிக் கொள்கின்றனர். உதாரணமாக, ஒரு கப்பலை காப்பாற்றுவதற்காக அதில் பயணம் செய்பவர்களை அழிவின் குழியில் தள்ளுவதை அரசனின் சட்டம் ஆகுமானதாக கருதுகின்றது. அவர்களை அழிக்க அனுமதி வழங்குகிறது. இறைவனுக்கு இப்படிப்பட்ட இக்கட்டான நிலை உருவாகவே முடியாது. எனவே, இறைவன் முழுமையான வல்லமை உள்ளவனாக இருந்தும் ஒன்றுமில்லாதவற்றிலிருந்து ஒன்றை உருவாக்க முடியாதவனாக இருந்தால் அவன் பலவீனமான ராஜாக்களை போல தனது வல்லமையை வெளிப்படுத்த வேண்டிய இடத்தில் அநீதியிழைப்பவனாக ஆகி விடுவான். அல்லது நீதிமானாக செயல்பட்டு தனது இறைத் தன்மைக்கே பிரியா விடை கொடுத்து விடுவான். ஆனால், இறைவனது கப்பல் எல்லா வல்லமைகளுடனும் உண்மையான நீதியுடன் சென்று கொண்டிருக்கிறது.

**தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனது ஒரே பண்புப்பெயர் **அஸ்ஸலாம்** ஆகும். அதாவது, அந்த இறைவன் எல்லாவிதமான துன்பங்களிலிருந்தும் குறைகளிலிருந்தும் கொடுமைகள் இழைக்கப்படுவதில் இருந்தும் பாதுகாப்பாக இருக்கின்றான். மாறாக, மற்றவர்களுக்கு பாதுகாப்பை வழங்கக் கூடியவனாகவும் அவன் இருக்கின்றான். இந்த பொருளும் வெளிப்படையாக நமக்கு தெரியக் கூடியதுதான். ஏனென்றால், அந்த இறைவனே துன்பங்களில் வீழ்ந்து விட்டால், மக்களது கைகளால் தாக்கப்பட்டால், தனது எண்ணங்களில், நாட்டங்களில் அவனுக்கு தோல்வி ஏற்பட்டால் பிறது இந்த அவனது தீய முன்மாதிரியைக் கண்டு உள்ளத்திற்கு எப்படி திருப்தி ஏற்படும்? இப்படிப்பட்ட இறைவன் கண்டிப்பாக நம்மை துன்பங்களிலிருந்து விடுவிப்பான் என்று எவ்வாறு நம்ப முடியும்? பிறகு இறைவன் தன்னைப் பற்றி அமைதியை வழங்குபவன் என்றும் கூறியுள்ளான். தனது சிறப்புத் தன்மைக்கும் ஏகத்துவத்திற்கும் அவன் ஆதாரங்களை நிலைநாட்டுபவனாவான். உண்மையான இறைவனை ஏற்றுக் கொண்டவர்களுக்கு எந்தவொரு சபையிலும் வெட்கப்பட வேண்டியது வராது என்பதை இது சுட்டிக் காட்டுகின்றது. ஏனென்றால், அவரிடம் மகத்தான ஆதாரங்கள் இருக்கும்.

ஆனால் செயற்கையான இறைவனை ஏற்றுக்கொள்பவர்கள் பெரும் துன்பத்தில் இருக்கின்றார்கள். அவர் ஆதாரங்களை எடுத்து வைப்பதற்குப் பகரமாக ஒவ்வொரு வீணான வி-யத்தையும் அது இரகசியமான வி-யம் என்றே கூறுவார். அவர் பரிகாசம் செய்யப்படாமல் இருப்பதற்காகவே அவ்வாறு செய்கின்றார். அப்படிப்பட்டவர் நிரூபிக்கப்பட்டு விட்ட தவறுகளை மறைக்க விரும்புகின்றார். பிறகு அல்லாஹ் தன்னைப் பற்றி **அல்முஹைமினுல் ஜப்பாருல் முதகப்பிர்** - அதாவது அவன் எல்லாரையும் பாதுகாப்பவன். எல்லாரையும் மிகைத்து நிற்பவன். சீர்குலைந்து போனவற்றை சரி செய்பவன். மிகுந்த தன்னிறைவு பெற்றவன் என்று கூறியிருக்கின்றான்.

நான் ஓதிய இந்த (59:24) வசனத்தில் அடியானை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்கின்ற எல்லா இறைபண்புகளும் கூறப்பட்டிருக்கின்றது. அவை அல்லாஹ்வின் கருணைக்கு நம்மை வாரிசுகளாக ஆக்கக்கூடியவையாக இருக்கின்றன. அவன் அரசனாவான். ஒவ்வொரு தவறிலிருந்தும் பலவீனத்திலிருந்தும் அவன் தூயவனாக இருக்கின்றான். ஒவ்வொரு தீங்கிலிருந்தும் தூயவனாக இருக்கின்றான். அவன் முழுமையான அமைதியின் உறைவிடமாவான். அவன் அடியார்களை எல்லாவிதமான ஆபத்துகளிலிருந்தும் பாதுகாப்பவனாவான். எல்லாரையும் கண்காணிப்பவனாக அவன் இருக்கின்றான். எல்லாவிதமான ஆற்றல்களும் அவனிடம் இருக்கின்றது. அவன் எல்லாரையும் மிகைத்து நிற்பவனாவான். ஒவ்வொரு உடைந்து போன பணிகளையும் சரி செய்பவனாவான். ஒவ்வொரு இழப்பையும் நிறைவு செய்பவன். அவன் எல்லா தேவைகளையும் நிறைவேற்றக் கூடியவனாக இருக்கின்றான். எனவே இப்படிப்பட்ட ஆற்றல்மிக்க இறைவன் தொடர்பாக அவன் பலவந்தத்தை மேற்கொள்பவன் என ஒருபோதும் நாம் கூற முடியாது. அடியான் தொடர்பாக கூறப்படும் இப்படிப்பட்ட வி-யங்கள் ஒருபோதும் இறைவனுக்கு பொருந்தாது. ஏனென்றால், தற்காலிக ஆற்றல் அல்லது தற்காலிக அரசாங்கம் ஆகியவை தற்காலிகமாக இருக்கின்ற மக்களுக்குத்தான் தேவைப்படும். இறைவனோ நிரந்தரமாக இருக்கக்கூடியவன். நிரந்தரமாக ஆற்றல்களின் உறைவிடமாக அவன் இருக்கின்றான். இதற்கெதிரில் அடியானுக்காக **அல் ஜப்பார்** என்ற பண்பு வருகின்றபோது இதற்கு கருணையற்றவன், கர்வத்தின் காரணமாக போதனைகளை ஏற்காதவன், பலவந்தமாக தான் கூறும் வி-யத்தை ஏற்க வைப்பவன், சண்டையிடுபவன் ஆகிய பொருள்கள் இருக்கின்றது. அல்லாஹ் திருக்குர்ஆனில் எங்கெல்லாம் **ஜப்பார்** என்ற சொல்லை அடியார்களுக்காக பயன்படுத்தியுள்ளானோ அங்கெல்லாம் எதிர்மறையில் (negative) தான் பயன்படுத்தியுள்ளான். இந்த சொல் இவ்வாறு அடியார்களுக்காக வருகின்ற ஒரு சில வசனங்களை நான் இப்போது உங்கள் முன்பு வைக்கின்றேன். ஒரு திருக்குர்ஆன் விரிவுரையாளர் மனிதனுக்காக அல் ஜப்பார் என்ற சொல் கீழ்க்காணும் பொருள்களில் பயன்படுத்தப்படுவதாக எழுதியுள்ளார்.

முதலாவது பொருள், ஆதிக்கம் செலுத்துபவன். இதற்கானஆதாரமாக அவர் வைக்கும் திருக்குர்ஆன் வசனம். அதாவது, **வமா அன்த அலைஹிம் பி ஜப்பார்** - நீர் இவர்கள் மீது பலவந்தமாக நடந்து கொள்ளும் கண்காணிப்பாளர் அல்ல. (50:46)

இரண்டாவது பொருள், மகத்தான உடற்கட்டைக் கொண்டவன். **இன்ன ஃபீஹா கவ்மன் ஜப்பாரீன்** - நிச்சயமாக இவர்களில கடினமான சமுதாயத்தை சார்ந்தவர்கள் இருக்கின்றார்கள்.

மூன்றாவது பொருள் அல்லாஹ்வை வணங்குவதற்கு எதிராக கிளர்ச்சி செய்பவன். **வலம் யஜ்அல்னி ஜப்பாரா** - மேலும் நான் கடுமையானவனாக ஆக்கப்படவில்லை.

நான்காவது பொருள் மிக அதிகமாக சண்டை போடுபவன். **பதஸ்தும் ஜப்பாரீன** என்று திருக்குர்ஆனில் வந்துள்ளன. இதற்கு பலவந்தமாக பிடிப்பவர்கள் என்ற பொருள் இருக்கின்றது. (காண்க, 26:131)

**இன் துரீது அன் தகூன ஜப்பாரன் ஃபில் அர்ழ்** - நீர் நாட்டில் உமது பலவந்தத்தை திணிப்பதை விரும்புகின்றீர் என்றும் வந்துள்ளது.

ஆதிக்கம் செலுத்துபவன் என்ற பொருளில் எந்த வசனத்தை நான் மேற்கோளாக வைத்துள்ளேனோ அது சூரா அல் காஃப் -ன் 46வது வசனமாகும். அல்லாஹ் கூறுகின்றான்.

அவர்கள் கூறுபவற்றை நாம் நன்கறிவோம். நீர் அவர்களை கட்டாயப்படுத்தி சீர்திருத்தும் கண்காணிப்பாளராக நியமிக்கப்படவில்லை. எனவே, நீர் எனது எச்சரிக்கைக்கு அஞ்சுபவருக்கு குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறிக்கொண்டே இருப்பீராக. (50:46)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்பவர்களுக்கும் இந்த கட்டளை பொருந்தும். உங்களது வேலை தூதுச் செய்தியை எட்ட வைப்பதுதான். பலவந்தமாக எவரையும் நீங்கள் சீர்திருத்த முடியாது. அல்லாஹ் தனது அன்பிற்குரியவர்களுக்கு சாதகமாக அடையாளங்களை காட்டும்போதுதான் மறுப்பவர்களுக்கு நமது பாவங்களின் காரணமாகத்தான் தண்டனை கிடைக்கின்றது என்பது தெரிய வருகிறது. ஆனால் சில துர்பாக்கியசாலிகளுக்கு இவ்வாறு தண்டனைகள் கிடைத்த பிறகும்கூட உண்மையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. பாகிஸ்தானிலும் பல்வேறு இயற்கை சீற்றங்கள் வந்த பிறகு பத்திரிகைகளில் இது தொடர்பாக பல பத்திகளை எழுதுபவர்கள் எழுதிய பிறகும், எங்களது தவறுகளின் காரணமாகத்தான் இவையெல்லாம் நடக்கின்றது என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்ட பிறகும் அல்லாஹ்வின் குரலின் பக்கம் அவர்கள் செவிசாய்க்கவில்லை. தங்களது கண்களைத் திறந்து அவர்கள் பார்க்கவில்லை. எவ்வாறிருப்பினும் உங்களது வேலை எச்சரிப்பதும், தூதுச் செய்தியை எட்ட வைப்பதுமேயாகும் என அல்லாஹ் நமக்கு கட்டளையிட்டுள்ளான். எனவே, மனிதர்கள் மீதுள்ள அனுதாபத்திலும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்பவம் உலகை நேர்வழியின் பக்கம் அழைத்துக் கொண்டேயிருப்பது நமது பணியாகும். உம்முடைய தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளான். இந்த வாக்குறுதி ஒவ்வொரு நாளும் நிறைவேறுவதை நாம் கண்டு வருகின்றோம். உம்மை யார் ஏற்றுக் கொண்டுள்ளார்களோ அவர்களது பணி தூதுச் செய்தியை எட்ட வைத்துக் கொண்டே இருப்பதுதான். அதற்குரிய விளைவுகளை ஏற்படுத்துவது எனது பொறுப்பாகும் என்றே அல்லாஹ் இந்த இல்ஹாம் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கின்றான். அதற்கான வழிவகைகளை செய்வது எனது பொறுப்பாகும். அதனைப் பயன்படுத்துவது உங்களது வேலையாகும் என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே, உள்ளங்களை வெல்வது இறைவனின் வேலையாகும். எனவே, நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நாம் செய்து கொண்டே செல்ல வேண்டும். அல்லாஹ் இதற்கான நற்பேற்றை நமக்கு வழங்குவானாக!

கீழ்ப்படியாமல் இருப்பவர்களையும், கிளர்ச்சி செய்பவர்களையும அவர்கள் எந்த அணியில் உள்ளனர் என்பதைப் பற்றி சூரா ஹூதில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

மேலும் இவர்களே ஆது (சமுதாயத்தினர்) இவர்கள் தங்கள் இறைவனின் அடையாளங்களை மறுத்து அவனுடைய தூதர்களுக்குக் கட்டுப்படாதிருந்தனர். மேலும் அவர்கள் (உண்மையின்) எல்லா கொடிய எதிரிகளின் கட்டளையையும் பின்பற்றிக் கொண்டிருந்தனர்.

இவ்வசனத்திலிருந்து ஆது சமுதாயத்தினர் நன்மைகளை மறுத்தது நிரூபிக்கப்பட்டிருக் கின்றது. இவர்கள் தூதர்களை மறுத்தனர். உலக அளவில் பொருளும் செல்வமும் உள்ளவர்கள்தான் அவர்களுக்கு போதுமானவர்களாக இருந்தார்கள். அவர்கள்தான் அனைத்தும் என அவர்கள் கருதினார்கள். ஆனால் அவர்களோ அல்லாஹ்வின் பார்வையில் கிளர்ச்சி செய்யும் மக்களாக இருந்தனர். ஆனால், அல்லாஹ்வுக்கு

எதிரில் இவர்கள் அவர்களுக்கு எவ்விதத்திலும் உதவ முடியவில்லை. எனவே, சென்ற கால சமுதாயங்களிடமிருந்து படிப்பினை பெற்றவாறு இனி வர இருக்கும் சமுதாயங்களையும் அவற்றை நினைவு கூர்ந்து செயல்பட வேண்டும் என்று அல்லாஹ் இங்கு கூறுகின்றான்.

**சூரா அஷ்ஷுஅராவில் அல்லாஹ் கூறுகின்றான்.**

நீங்கள் (எவரையும்) பிடித்துக் கொண்டால் கொடுங்கோலனைப் போன்று பிடித்துக் கொள்கிறீர்கள். (26:131)

இங்கு மீண்டும் ஆது சமுதாயத்தினர் பற்றியே குறிப்பிட்டு உங்களுக்கு வெற்றி கிடைத்த சமயத்தில் நீங்கள் எவ்வாறு உங்களது நாகரிகமிக்க சமுதாயத்தை அழிவிற்கு ஆளாக்கினீர்கள். எந்த சமுதாயத்தின் மீது உங்களது ஆதிக்கமும் பிடியும இருந்ததோ அந்த சமுதாயத்தை மிகவும் இழிவுபடுத்த நீங்கள் முயற்சி செய்தீர்கள். அதன் மூலம் நீங்கள் உங்களது பெருமையையும் ஆற்றலையும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளீர்கள். உங்களது போர் செய்யும் ஆற்றலை வைத்து ஒவ்வொரு சமுதாயமும் உங்கள் காலடியில் கிடக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள். ஆனால், அல்லாஹ்வுக்கு இது விருப்பமான செயலல்ல என்று அல்லாஹ்வின் தூதர் அவர்களை எச்சரிக்கை செய்ததாக அல்லாஹ் கூறுகின்றான். இறைவனுக்கு அஞ்சி உங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள் என்று அவர்களிடம் இறைவனின் தூதர் கூறினார்.

இன்று சில பெரும் சக்திகள் இதே கொள்கையைக் கடைபிடிப்பதை நாம் பார்க்கின்றோம். அரசியலின் காரணமாக சில நேரங்களில் உதவி செய்கின்றோம் என்ற பெயரில் சமுதாயங்கள் மீது இவர்களது ஆதிக்கம் இருந்து வந்தாலும் இவர்களிடம் இருக்கும் பெருமையும், கர்வமும் இவர்களது உள்ளத்தில் இருப்பது வேறு. இவர்கள் வெளிப்படுத்தும் வி-யம் வேறு என்பதை தெளிவாக நமக்கு தெரிவிக்கின்றது. இவர்களது உண்மையான நோக்கம் ஆதிக்கம் செலுத்துவதும் மற்றவர்களை தமது பிடியின்கீழ் கொண்டு வருவது மட்டுமேயாகும். தங்களது அரசாங்கங்களை நிறுவுவதே இவர்களது உண்மையான நோக்கமாகும். சமுதாயங்களை தனது காலடியின்கீழ் கொண்டு வர வேண்டும் என்பதே உண்மையான நோக்கமாகும். பிறகு மக்களை அநீதியான முறையில் கைது செய்து இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவர்களுக்கு இவர்கள் தண்டனையும் கொடுக்கின்றார்கள்.

இன்றைய நாட்களில் சில அரசாங்கங்கள் குறிப்பாக சில இஸ்லாமிய நாடுகள் அநீதி இழைப்பதிலும் கிளர்ச்சியிலும் முன்னேறி வருகின்றார்கள். முதலில் பாகிஸ்தானில் அநீதிகள் இழைக்கப்பட்டன. பிறகு அங்குள்ள அரசாங்கங்கள் பல்வேறு சமயங்களில் அநீதி இழைக்கப்பட்ட அஹ்மதிகள் மீது மேலும் மேலும் தொடர்ந்து அநீதியிழைத்து வந்தன.

இப்போது இந்தோனேஷியாவிலும் சிறிது காலமாக அஹ்மதிகளுக்கு எதிராக கொடுமைகள் இழைக்கப்பட்டு வருவதை நாம் பார்க்கின்றோம். நாங்கள் ஆற்றல்மிக்கவர்கள் என்று இவர்கள் கருதுகின்றார்கள். எப்படி வேண்டுமென்றாலும் அஹ்மதிகளிடம் நாம் நடந்து கொள்ளலாம். அவர்களுக்கு தண்டனை வழங்கலாம். அஹ்மதி பெண்கள், சிறுவர்கள் மீது அநீதி இழைக்கலாம். அஹ்மதிகளின் சொத்துக்களை எரிக்கலாம் என்று அவர்கள் கருதுகின்றார்கள். அங்குள்ள அரசாங்கத்தில் முல்லாக்கள் இணைந்து விட்டதே இதற்கு காரணமாக இருக்கின்றது. தங்களது அரசியலை மேலோங்கச் செய்வதற்காகவும் தங்களது அரசாங்கம் உடைந்து விடக் கூடாதே என்பதற்காகவும் அவர்கள் விரும்பாத நிலையிலும் அங்குள்ள அரசாங்கத்தை நடத்துபவர்கள் முல்லாக்களின் பேச்சை வேறு வழியில்லாமல் ஏற்றுச் செயல்பட ஆரம்பித்துள்ளார்கள். ஆனால், முல்லாக்களோ எப்போதும் மார்க்கத்தின் பெயரில் குழப்பத்தைத்தான் பரப்பியுள்ளார்கள். தங்களை அவர்கள் கொடுங்கோலர்களாக அவர்கள் கருதுகின்றார்கள். ஆனால், அவர்களின் இந்த செயல் அவர்களை அல்லாஹ்வின் கட்டளையையும் மீறி செயல்பட்டு அடியார்களுக்குரிய உரிமைகளையும் நிறைவேற்றாமல்

இருக்கின்ற கர்வமுடையவர்களின் அணியில் இவர்களை சேர்த்திருப்பதை அவர்கள் புரிந்து கொள்ள முடியவில்லை. மேலும் அல்லாஹ் இப்படிப்பட்ட அநீதியிழைப்பவர்கள் பற்றியும் கிளர்ச்சி செய்கின்றவர்கள் பற்றியும் குறிப்பிடும் போதும் அல்லாஹ்வின் தூதர் மீதுள்ள பகைமையின் காரணமாக அத்தூதருக்கும் அவரை ஏற்றுக் கொண்ட சமுதாயத்திற்கும் இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்தவர்களை பற்றி கூறும் போதும் அல்லாஹ் **இன்ன ரப்பக வஹுவல் அஸீஸுர் ரஹீம்** – நிச்சயமாக உமது இறைவன் மிகைத்து நிற்பவனும் மீண்டும் மீண்டும் கருணை செய்பவனுமாவான் என்று அல்லாஹ் கூறுகின்றான். இறுதி வெற்றி நம்முடையதுதான் என்பது நமக்குத் தெரியும். ஏனென்றால், நமது இறைவன் நம்முடன் இருக்கின்றான். நான் உன்னுடனும் உனது அன்பிற்குரியவர்களுடனம் இருக்கின்றேன் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வாக்களித்த அந்த இறைவன் நம்முடன் இருக்கின்றான். எனவே, இறுதி வெற்றி நம்முடையதுதான் இன்–ா அல்லாஹ் என்பதை நாம் உறுதியாக நம்புகின்றோம். எவர்கள் தங்களை கொடுங்கோலர்களாக எண்ணிக் கொள்கின்றார்களோ அவர்களும் தங்களது முடிவை எட்டப் போகின்றார்கள் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். அஹ்மதிகளை எதிர்ப்பதன் விளைவாக இவர்கள் தங்கள் தகுதியை உயர்த்திக் கொண்டிருப்பதாக இவர்கள் கருதுகின்றார்கள். ஆனால், இவர்களது காலடிகளிலிருந்து பூமி விரைவில் விலகப்போகிறது என்பது இவர்களுக்கு தெரியாது. அவர்கள் உயர்வாக செல்வதற்குப் பகரமாக ஆழமான பூமியின் இருள்களில் சிக்கிப் புதையுண்டு போவது பற்றி அவர்களுக்கு தெரியவில்லை. அதன் பக்கம் மிக வேகமாக அவர்கள் முன்னேறிச் செல்கின்றார்கள்.

எனவே, அஹ்மதிகள் எங்கு வாழ்ந்து வருபவர்களாக இருந்தாலும், இந்தோனேஷியா அல்லது பாகிஸ்தான் அல்லது வேறு எந்த நாடுகளில இருந்தாலும், எங்கு அவர்கள் கொடுமைகளுக்கு இரையானாலும் அவர்களுக்கு உதவி செய்பவனாக மிகைத்து நிற்கின்ற கருணையுள்ள இறைவன் அவர்களுடன் இருக்கின்றான் என்பதை எப்போதும் அவர்கள் நினைவில் வைக்க வேண்டும். எனவே, அவனுக்கு முன்னால் குனிந்தவாறு அவனது உதவியை கேளுங்கள். மறைவான செய்திகளை அறிந்த அந்த இறைவனின் பார்வையில் இவர்கள் சீர்திருந்தத் தகுதியற்றவர்களாக இருந்தால் இவர்களிடமிருந்து விடுபட்டு இறைவன் நமக்கு இரட்சிப்பை வழங்கட்டும். இவர்களின் சொற்களைக் கேட்டு நடந்து தங்களது உலகத்தையும் மறுமையையும் அழிவிற்கு ஆளாக்குகின்ற இந்த முட்டாள்கள்அல்லது இந்த பலவீனமானவர்கள் மீது கருணை காட்டப்பட்ட நாம் இந்த அநீதியிழைப்பவர்களிடமிருந்து இவர்களை பாதுகாக்கும்படி அந்த கருணைமிக்க இறைவனிடம் கேட்க வேண்டும். அல்லாஹ் கூறியுள்ளதற்கு ஏற்ப அல்லாஹ் இவர்களை கதாலிக யத்பஉல்லாஹு அலா குல்லி கல்பி முதகப்பிரின் ஜப்பார் – இவ்வாறே அல்லாஹ் ஒவ்வொரு ஆணவங்கொண்டுள்ள கடின உள்ளம் கொண்டவர்கள் மீது முத்திரையிட்டு விடுகின்றான் என்ற அவனது சொல்லுக்கு உரியவர்களின் அணியில் இவர்களை சேர்த்து விட்டால் பிறகு உலகில் ஏனைய பகுதிகளிலுள்ள அஹ்மதிகள் அதிகமாக துஆ செய்வது அவசியமாகும். தூதுச் செய்தியை எட்ட வைப்பதும் அவசியமாகும். அல்லாஹ் இதற்கான தவ்ஃபீக்கை நமக்கு வழங்குவானாக. இந்தோனேஷியாவிலுள்ள அஹ்மதிகளிடம் நான் கூறிக் கொள்வது இதற்கு முன்னர் பழைய முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப அதற்கு உரியவர்களாக பாகிஸ்தானி அஹ்மதிகள் மட்டுமே இருந்தார்கள். நெருப்பு மூட்டப்பட்ட பிறகும் கூட காவல்துறையினரும் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துபவர்களும் அதை வேடிக்கை பார்த்தவாறே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். இப்போது இந்தோனேஷியாவிலும் தொடர்ந்து பலமுறை இப்படிப்பட்ட சம்பவங்களை நடந்துள்ளன. அது இந்த காட்சிகளை மீண்டும் நம் கண் முன்னால் கொண்டு வந்திருக்கின்றது. இது திருக்குர்ஆனில் இவர்கள் நெருப்பு மூட்டி வேடிக்கை பார்த்து கொண்டிருப்பார்கள் என்ற அல்லாஹ்வின் முன்னறிவிப்பிற்கு ஏற்பவே நடந்துள்ளது. எனவே, உங்களது ஈமானில் வலுவை ஏற்படுத்துங்கள். விரைவில் இந்த அநீதியிழைப்பவர்களின் அநீதி இவர்கள் மீதே திரும்பி விடும். அல்லாஹ் எல்லாருக்கும்

துஆ செய்வதற்கான தவ்ஃபீக்கை வழங்குவானாக. பொறுமையுடன் உறுதியாக நிலைநிற்பதற்கான தவ்ஃபீக்கை வழங்குவானாக.

**இரண்டாவது குத்பாவிற்கு முன்னதாக ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.**

ஒரு வேதனை நிறைந்த தகவல் நமக்கு கிடைத்துள்ளது. நம்முடைய ஜாமிஆ அஹ்மதிய்யா கானாவில் படித்து வந்த மாணவர். அவருக்கு வயது 20. வக்ஃபே நவ் திட்டத்தின்கீழ் வாழ்க்கையை ஜமாஅத்திற்காக அர்ப்பணம் செய்தவர். மிகவும் பாக்கியம் பெற்ற நல்ல பணிகளில் ஒத்துழைப்பு கொடுத்த ஒரு இளைஞர் அவர். கானாவில் ஆண்டு மாநாட்டில் நான் அங்கு சென்ற சமயத்தில் இரவு பகலாக அவர் duty கொடுத்து வந்தார். சில நாட்கள் நோயாளியாக இருந்த அவர் மே மாதம் 4 ம் தேதி இரவில் வஃபாத் ஆகி விட்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

எல்லா வகையிலும் சிகிச்சைக்கான முயற்சிகள் செய்யப்பட்டன. இறுதியில் இறைவனது விருப்பத்தில் நாம் திருப்தி அடைகின்றோம்.

இவரது பெற்றோர்கள் 1988 -ல் கிறிஸ்தவர்களிலிருந்தும் அஹ்மதிய்யத்தின் மூலம் இஸ்லாத்தை தழுவினார்கள். இவரது தீவில் இவர்களது குடும்பம்தான் முதல் அஹ்மதி குடும்பமாகும். மனத்தூய்மை நிறைந்த குடும்பங்களில இந்த குடும்பமும் அடங்கும். இவரது தாயார் பள்ளிக்கூட ஆசிரியை ஆவார்கள். அதிகமாக தப்லீக் செய்வதில் ஆர்வம் உள்ளவர். இவரது தந்தையாரும் ஜமாஅத்தின் மீது பற்றுள்ள நல்ல மனிதராவார். இவரும் வஃபாத் ஆகி விட்டார். இவர் நான்காவது கலீஃபத்துல் மஸீஹின் காலத்தில் லண்டன் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்துள்ளார். மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு திரும்பிய பிறகு சில நாட்கள் நோய்வாய்ப்பட்டு இருந்த அவர் அதற்கு பிறகு வஃபாத்தாகி விட்டார்கள். அல்லாஹ் இவரது தந்தையாரையும் மன்னித்து அவரது தகுதியை உயர்த்துவானாக. அவரது மகனுடனும் மன்னிக்கும் தன்மையுடன் பரிமாறுவானாக. இந்த பெற்றோர்களுக்கு நீண்ட காலமாக ஆண் வாரிசு இல்லாமல் இருந்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹின் துஆவின் விளைவாக இந்த ஆண் மகன் இவர்களுக்கு பிறந்தார். அந்த மகனை அவர் வக்ஃப் செய்தார். அல்லாஹ் தாயாருக்கும் பொறுமையை வழங்குவானாக. அவனது விருப்பத்தில் திருப்தியடையச் செய்வானாக. இந்த குடும்பத்திற்காகவும் குறிப்பாக இவரது தாயாருக்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். இப்போது ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இந்த இளைஞரின் ஜனாஸா காயிப் தொழுகையையும் நான் தொழுவிப்பேன்.

★ ★ ★ ★


**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH, LONDON**
**ON 16.05.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**